

# வெளிப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# வெளிப்படுதல்

பெண்களின் கவிதைகள்

தொகுப்பாளர்

***ஜெயந்தி தளையசிங்கம்***

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தலைப்பு | - வெளிப்படுதல்<br>பெண்களின் கவிதைகள் |
| தொகுப்பாளர் | - ஜெயந்தி தளையசிங்கம் |
| முற்பதிப்பு | - ஜுன் 2001 |
| முன் அட்டை ஓவியம் | - பிரபாஜினி கோபாலசிங்கம் |
| பின் அட்டை ஓவியம் | - கிராமிய பெண்கள் சங்கத்தினர்<br>(நாவற்குடா, இருதயபுரம்,ஆரையம்பதி காங்கேயனோடை,<br>குமாரபுரம் முறக்கொட்டாஞ்சேனை, பூநொச்சிமுனை) |
| அச்சாக்கம் | - சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம்<br>மட்டக்களப்பு. |
| வெளியீடு | - சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்<br>20, டயஸ் வீதி, மட்டக்களப்பு. |
| விலை | - 40/- |

| | |
|---|---|
| Title | - VELIPPADUTHAL<br>Poems of Women |
| Complied by | - Jeyanthy Thalayasingam |
| First Edition | - June 2001 |
| Cover Design | - Prabajini Kopalasingam,<br>- Village women Society |
| Printing | - St. Joseph's Catholic Press,<br>Batticaloa. |
| Publishers | - Suriya Women Development Center |
| Prize | - 40/- |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், சமூகத்தில் பெண்கள் தொடர்பாக இருக்கின்ற பார்வைகள், பெண்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்ற கலாசார அம்சங்கள், சமூக கட்டமைப்பு முறைமைகள் என்பவற்றை மீள் பார்வைக்கு உட்படுத்தி, மாற்றுக் கருத்துக்களை முன்வைக்கும் வகையில், விழிப்புணர்வை பல்வேறுபட்ட செயற்பாடுகளின் ஊடாக முன்னெடுத்து வரு கின்றது. இந்தச் செயற்பாடுகளில் கலாசாரச் செயற்பாடுகளும் அமையப் பெற்றிருக்கின்றன.

விழிப்புணர்வை இலகுவான முறைமைகளுக்கு ஊடாக ஏற்படுத்து வதற்குச் சிறந்த ஊடகங்களாக கலை இலக்கியப் படைப்புக்கள், கலாசாரச் செயற் பாடுகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

எனவே கலாசாரச் செயற்பாடுகளுடு எமது கருத்துக்களை வெளிப் படுத்தவும், அவற்றை முன்னெடுப்பதற்குமாக கலாசார குழு ஒன்றை அமைத் துள்ளோம். இதில் 12 பேர் அங்கம் வகிக்கின்றனர். இக்குழு உறுப்பினர்களை வலுவூட்டும் வகையில் பல பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்பட்டன. நாடகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியம், கவிதை, சிறுகதை பால்நிலைப்பாகுபாடு, சுவரொட்டித் தயாரிப்பு, முகாமைத்துவம், முரண்பாடுகளை கையாளுதல் எனப் பல்வேறு பட்டறைகள் இவற்றுள் அடங்கும். இந்தப் பின்னணியில் அமையப் பெற்றவைதான் கவிதை, வீதி நாடகப் பட்டறைகள்.

கவிதைப் பட்டறை 1998ம் ஆண்டு நவம்பர் மாதம் இடம் பெற்றது. அவ்வை விக்னேஸ்வரன் பட்டறைக்கு வழங்குனராகக் கலந்து கொண்டார். கவிஞரான இவர், பெண்ணிலைச்சிந்தனைக் கருத்துகள் பலவற்றை கவிதை, நாடகம், கட்டுரைகள் மூலம் வெளிப்படுத்தி வருகின்றார்.

கவிதைப் பட்டறையில் கலந்து கொண்ட கலாசாரக் குழு உறுப்பினர்களுடன் பல அனுபவ பகிர்வுகள் இடம் பெற்றன. இவை பெண்களை இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தும் சமூகத்தில், பெண்கள் மீதான அடக்கு முறைகளை வெளிக்கொண்டுவரும் வகையில் கலந்துரையாடப்பட்டன. எனவே அந்த விடயங்கள் பற்றிய உணர்வை மொழிகள் ஊடாக வெளிப்படுத்தினர். அவை கவிதை வடிவம் பெற்றது. அவர்கள் எழுதிய கவிதையைப்பற்றிய அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் போது "முதல் தடவை கவிதை எழுதியது மனதுக்கு பெரும் மகிழ்ச்சியாக இருந்தது", "எமக்குள்ளே இத்தனை கருத்துக் களும் இருந்ததா என்பது ஆச்சரியமாகவும்", "ஒரு கவிதை எழுதிய பின்பு தொடர்ந்து எழுத வேண்டும் என்ற உணர்வு", "எம் மனதுக்குள் இருந்த ஆசைகளும் கருத்துக்களும் கவிதையாக வெளிப்படுத்தியது", "எம் வாழ்வை மீட்டுப்பார்ப்பதற்கு முடிந்தது", "எமக்கான இருப்பை அடையாளம் காண முடிந்தது" எனத் தெரிவித்தனர்.

வீதி நாடகப் பட்டறை 2000ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம் பெற்றது. சிவஞானம் ஜெயசங்கர் வழங்குனராகக் கலந்து கொண்டார். இவர் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளரும் அரங்கச் செயற்பாட்டாளருமாவார். அத்துடன் பெண்களது முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு பல வகையில் ஆதரவுகளை வழங்கி அவற்றைச் செயற்படுத்தி வருபவர். இப்பட்டறையில் நாடகத்தயாரிப்புக்காக அனுபவப் பகிர்வுகளும் கலந்துரையாடல்களும் இடம் பெற்றன. அச் சந்தர்ப்பத்தில் பலஆக்கங்கள் உருப்பெற்றன. அனுபவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்வுகளும் கலந்துரையாடல்களும் கலாசாரக்குழு உறுப்பினர்களுக்கிடையில் பல சிந்தனைகளைத் தூண்டியிருந்தன. எனவே வெளிப்படுத் துவதற்கான சூழல் ஒன்று உருவாகும்போது படைப்பாற்றல் இயல்பாகவே வெளிப்படுவதை அவதானிக்கமுடிகிறது. இத்தகைய இயல்பான அம்சத்தை கவிஞர்கள் என தம்மை முத்திரை குத்திக்கொள்பவர்கள், படைப்பாற்றல் மிக்கவர்கள் என்று எண்ணுகின்ற அதிகாரச் சிந்தனையாளர்களின் நிலை இன்று கேள்விக்குள்ளாகின்றது.

எனவே இத்தகைய சிந்தனையாளர்களின் நிலையை இவ்விரு பட்டறைகளும் பொய்ப்பித்துள்ளன. பட்டறையின் இறுதி நாளில் இந்தக் கருத்து நிலைநிறுத்தப்பட்டது. கவிதை எழுதும் முன்னனுபவம் எதுவும் இல்லாத இவர்கள், அவர்களது உள்ளத்தில் தோன்றிய உணர்வை பட்டென்று பளிச்சிடும் வகையில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களது அனுபவப் பின்னணியில் நேர்மையான உணர்வுகளாக இவை அமைந்துள்ளன.

எனவே அவர்களுக்குள்ளே மறைந்தும் புதைந்தும் கிடந்த சிந்தனைக் கீற்றுக்களையும், உணர்வுத் துளிகளையும் வெளியில் கொண்டுவந்த பெரும் பங்கை இப்பட்டறைகள் ஆற்றியுள்ளன. பெண்களின் ஆற்றல் என்பது பல் வேறுபட்ட துறைகளை சார்ந்ததாக உள்ளது. அத்தகைய ஆற்றல்களின் வகையில் அவர்களின் சிந்தனைத்திறன், படைப்பாற்றல் இவையிரண்டும் முக்கியமானவை.

பெண்கள் தமது உணர்வுகள், எண்ணங்கள், கருத்துக்களை இயல்பாக வெளிப்படுத்துவதற்கும் தமது திறமைகளை வளர்ப்பதற்கும் தமது ஆற்றல்களை அடையாளம் காணல் அவசியமென உணரத் தலைப்பட்டுள்ளனர். இத்தகைய தேவையை உணரப்பண்ணியது பெண்கள் அமைப்புக்கள் முன்னெடுத்து வரும் செயற்பாடுகளும் அவை பெண்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள விழிப்புணர்வுமே ஆகும்.

எனவே இன்றைய காலகட்டத்தில் பல பெண்கள் மத்தியில் அவர்களது இருப்பு பற்றி எழுந்துள்ள பலமான கேள்விகளையும், அது தொடர்பாகச் சிந்திக்கவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தொடர்பாகக் கலந்துரையாடவும் அவற்றை எழுதவும் முனைப்பு கொண்டுள்ள ஒரு நிலையை இன்று அவதானிக்க முடிகிறது. கற்பனைகளையும் ஆற்றல் களையும் வெளிப்படுத்தும் வகையில் கலை இலக்கியத்துறையில் பெண்களுக்கான வாய்ப்புக்கள் இருப்பதில்லை. இன்றைய சூழலில் பெண்களுக்கான கலை இலக்கிய உருவாக்கம் முக்கிய தேவையாக உள்ளது.

எனவே பெண்களுக்கான வாய்ப்புக்களை உருவாக்கும் போது அங்கு பல படைப்புக்கள் உருவாகின்ற நிலை உண்மை என்பதில் சந்தேகம் இல்லை. இவற்றை நிரூபிக்கும் வகையில் பட்டறைகள் அமைந்துள்ளன. இவற்றின் வெளிப்பாடுகளாகவே வெளிப்படுதல் என்னும் எமது கவிதை தொகுப்பு மலர்ந் துள்ளது.

இங்கு சூரியா நிலையத்திற்கு நேரடி அனுபவங்கள் பல உண்டு. பெண்கள் குடும்ப மட்டத்தில் இருந்து சமூக மட்டத்தை நோக்கி முன்னேறிய தோடு மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலேயே தமது பிரச்சினைகளை அழுத்திச் சொல்லும் அளவிற்கு அவர்களின் பல வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

வீட்டுக்குள்ளும், வெளியிலும் வேலை செய்யும் பெண்களின், ஆயிர மாயிரம் அவலங்கள், அவர்களின் போராட்டங்கள், இவற்றிற்குள் வாழும் பெண்கள், அவர்கள் கற்பனை செய்வதை சிந்திப்பவற்றை வெளிப்படுத்தும் வாய்ப்பு, சூழல் என்பது மிகமிகக் குறைவாகவே உள்ளது. இத்தகைய சூழ்நிலையில் சிட்டாக இருக்கின்ற கவிதை வடிவத்திற்குள் தமது மலைபோன்று இருக்கின்ற உணர்வுகளை அடக்கிவிடுகின்றனர். கதை, கட்டுரை வடிவத்தில் தமது உணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்று நினைக்கும் பெண்களுக்கு அவர்களது குடும்பச் சுமையும் அவர்களின் போராடும் வாழ்க்கையும் அவர்களின் நேரத்தையெல்லாம் விழுங்கிவிடு கின்றன. பெண்களின் படைப்பாற்றல்கள் அதிகளவில் கவிதைவடிவில் வெளிப் படுவதன் பின்னணி இதுதான்.

பயிற்சிப்பட்டறையில் எழுதப்பட்ட கவிதைகள் இரண்டு வகையின. ஒன்று, தனிக்கவிதை. ஒவ்வொருவராலும் எழுதப்பட்டவை. மற்றையது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்கவிதை. எமது கருத்தை வெளிப்படுத்துவதற்கு பல வடிவங்கள் உண்டு. எனவே குழுக்கவிதை இங்கு பாடலுக்கான கவிதையாக தோற்றம் பெறுகின்றது. "சும்மாகிடந்த மூங்கில்களை செப்பனிட்ட என் சிநேகிதியே இன்று இந்தப் புல்லாங்குழலில் வருவதெல்லாம் காற்றுக்கள் அல்ல கானங்கள்" என்ற விஜயலட்சுமியின் கவிதையடி இங்குள்ள சகோதரிகளுக்குப் பொருத்திப் பார்ப்பது மிகவும் பொருத்தமானதாகும். ஆம் சும்மாகிடந்த மூங்கில்களைத்தான் இந்தப் பட்டறைகள் செப்பனிட்டன. அந்தக் குழல்களில் இருந்து வரப்பெற்றவை தான் இந்த கவிதைகள்.

இக்கவிதைகளை தொகுத்து நோக்கும் போது, அவை இரண்டு தன்மைகளைக் கொண்டுள்ளதை காணமுடிகிறது. யுத்தச் சூழலின் அவலம், அது பெண்களுக்கு ஏற்படுத்தியுள்ள தாக்கம், வெற்று எதிர்பார்ப்புக்கள், பிரிவுத்துயர்கள். மற்றையது ஆணாதிக்கம் கொண்டதாக இருக்கும் சமூக அமைப்பின் ஆதிக்கச் சிந்தனைகளை இனியும் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது, அனுமதிக்க முடியாது. இந்த நிலையை மாற்றுவதற்காக ஒவ்வொரு பெண்களும் அவர்களது இருப்பை உறுதிப்படுத்த வேண்டும். வாழ்வு பற்றிய தேடல்கள், கேள்விகளை எழுப்பவேண்டும். பெண்கள் மீதான ஒடுக்கு முறைகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். எமது கற்பனைகள் ஆற்றல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். பெண்கள் ஆளுமை மிக்கவர்கள் என்ற பின்னணியைக் கொண்டுள்ளதை காணமுடிகிறது.

"கரங்களை இணைத்து" என்னும் கவிதையிலிருந்து
*பொட்டின்றி பூ வின்றி வெள்ளைத் துகிலுடன்*
*வாழ்வை எழுதினரே*
*விதவை என்றே எம்மை விழித்திடும் - உலகை*
*பிடுங்கியே எறிந்திடுவோம்*

"குட்டக்குட்ட குனிந்து நின்றால்" என்னும் கவிதையிலிருந்து
*எத்தனை தலைமுறை*
*அடிமை பெண்ணுக்கு*
*வெற்றி நடையினைப் போட்டு நாமிங்கு*
*வெற்றியீட்டுவோம் நாம் வெற்றியீட்டுவோம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மழியினில் தவழும்" என்னும் கவிதையிலிருந்து
உணர்வு கொண்ட உயிரம்மா நீயும்
துணிவுடன் வாழ உடன் வர வேண்டும்

"பெண்ணென்ற போர்வையால்" என்னும் கவிதையிலிருந்து
பெண் என்று எண்ணிவிடாதே - உன்னால்
பெருமைகள் பலவுண்டு முடங்கிவிடாதே

"கிளி" என்னும் கவிதையிலிருந்து
எனக்கு எதிரிகளும் இருக்கிறார்கள்- அதனால்
நான் பயப்பட வில்லை
பயந்து பயந்து - நான்
பறக்காமல் இருந்தால்...
எதிரிகளிடமிருந்து - நான்
தப்பவும் பழகி விட்டேன்
நான் சுதந்திரமாகப் பறந்து - வாழ்க்கையை
எதிர்கொள்ள விரும்புகிறேன்

"என் இருப்பு" என்னும் கவிதையிலிருந்து
என் சுதந்திரம்
என் முடிவுகள்
என் ஆசைகள்
என் கையில்
இப்போதும்...
எப்போதும்...

பதினெட்டுப் பெண்களின் இவ்வரிகள் சமூகத்திற்கு விழிப்பு ணர்வை ஏற்படுத்தல், பெண்களுக்கு துணிவைக் கொடுத்தல், வெளியுலகைக் காண்பதற்கு கூவி அழைத்தல், மௌனியாக இருக்காதே என தாய் மகளுக்கு கூறல், உரிமைகளை வென்றெடுப்பதற்காக அவர்கள் கொண்டுள்ள உறுதி கரங்களை இணைத்து பெண்கள் உரங்கொள் நெஞ்சோடு எழுக என அவர் களது ஆதங்கங்களைக் காட்டிநிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பெண்களின் ஆக்கங்கள் வெளிக்கொணரப்பட வேண்டும் அப்போதுதான் எழுத நினைப்பவர்களுக்கு உறுதுணையாகவும் எழுதுபவர் களுக்கு ஆர்வத்தையும் கொடுக்கும். இதுமட்டுமல்ல பெண்களது அனுபவங்கள் வரலாற்றுப் பொதிகளாக ஆவணப்படுத்தப்பட வேண்டியதன் அவசியமும் நன்கு உணரப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் இக் கவிதைத் தொகுதி வெளிவருவதில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் பெருமகிழ்ச்சி அடை கின்றது.

இத்தொகுப்பு முயற்சியின் ஆரம்ப கட்டத்தில் இருந்து பல வகையிலும் உதவிகள் புரிந்த கிழக்குப்பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சி. ஜெயசங்கர் அவர்களுக்கு மிகுந்த நன்றிகள்.

ஜெயந்தி தளையசிங்கம்
சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு
ஜூன் 2001.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிதைப் பயிற்சிப்பட்டறை 1998



வீதிநாடக பயிற்சிப்பட்டறை 2000

**பங்கு கொண்டோர்.**

பு. விஜிகலா
செ. மல்லிகா.
சே. விஜயலக்ஷ்மி
த. ஜெயந்தி
ஜெ. தில்லையம்மா
ச. உதயராணி
சி. சிறிவள்ளிஅம்மன்
ஆ. கில்டா ரூபினி
தே. அருட்கவிதா
நீ. ஜெயராணி
வ. யாமினி
க. லூர்த்து ஜீவகா
இ. அருள்ஜோதி
ம. பரமேஸ்வரி
கோ. பிரபாஜினி
இ. அமுதா
சி. ஜீவலதா
அ. இலங்கேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் குரல்

கரங்களை இணைத்து பெண்களைக் காக்க
ஏற்ற வழி அமைப்போம்.
துயரம் என்றே ஒன்று இல்லை என்றே - நாம்
கூவி அழைத்திடுவோம்.

வீட்டினுள்ளே நாம் முடங்கி இராமல்
வெளியுலகைக் காண்போம்.
விழிப்புடனே என்றும் இருந்து விட்டால் - புது
உலகையே கண்டிடுவோம் - நாம்

துகிலினை உரிந்த துயர்களை எல்லாம்
கனவாய் மறந்திடுவோம்.
தூக்கத்தில் இருக்கும் பெண்களை என்றும்
விழிப்புடன் வைத்திடுவோம் - நாம்

பொட்டின்றி பூவின்றி வெள்ளைத் துகிலுடன்
வாழ்வை எழுதினரே
விதவை என்றே எம்மை விழித்திடும் - உலகை
பிடுங்கியே எறிந்திடுவோம் - நாம்

பாரினில் வாழ்ந்திட வழிபல உண்டு
கரங்களை உயர்த்திடுவோம்.
நடந்தவை யாவையும் கனவென எண்ணி
கனலென மூண்டெழுவோம் - நாம்

கலாசாரக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டக் குட்டக் குனிந்து நின்றால்
குதித்துச் செல்லுவார்
தலையை நிமிர்த்திட துணிவு கொண்டிடு
வெளியில் வந்திடு நீ வெளியில் வந்திடு.

பழமை வாதக் கதையை எல்லாம்
விட்டு எறிந்திடு
புதிய வாழ்க்கையை அமைத்துக் காட்டிட
துணிவு கொண்டிடு நீ துணிவு கொண்டிடு.

பெண்களுக்கு சுதந்திரம் வேண்டுமென்றுமே
பெண் அடிமையின்
கொடுமைச் சுமையினை
அறுத்து வீசுவோம் நாம் அறுத்து வீசுவோம்.

பெண்களுக்கு கட்டுப்பாடோ
வாழ்க்கை முழுவதும்
பெட்டிப் பாம்பினை போல் இருந்திட
போகப் பொருளல்ல நாம் போகப் பொருளல்ல.

எத்தனை தலைமுறை
அடிமை பெண்ணுக்கு
வெற்றி நடையினை போட்டு நாமிங்கு
வெற்றியீட்டுவோம் நாம் வெற்றியீட்டுவோம்.

கலாசாரக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணென்ற போர்வையால் எம்மை - தினம்
வீட்டுக்குள்ளேயே பூட்டியே வைப்பார்
சமுதாயம் என்கின்ற பேய்தான் - பெண்ணின்
பழமொழி சொல்லி பாழாக்கி வைக்கும்.

பொம்பள சிரிச்சா போச்சு - அந்த
போயில விரிச்சா போச்சு என்றே
பெண்ணின் ஆசையை எல்லாம் - சிலர்
ஆண்டாண்டு காலமாய் அடக்கியே வைத்தார்.

பெண் புத்தி பின் புத்தி என்றே - பெண்ணை
பின்னுக்கு வைத்து வேடிக்கை பார்க்கும்
ஆண்கள் தான் எல்லாமே என்று - பெண்ணின்
உரிமையை என்றுமே தள்ளியே வைக்கும்.

கெட்ட கனவுகள் நினைந்து - உன்னை
பட்ட மரமாக நினையாதே பெண்ணே
கட்டுப்பாடுகளை மீறி - நீயும்
சுயமாக சிந்தித்து உரிமையைத் தேடு

பெண் என்று எண்ணி விடாதே - உன்னால்
பெருமைகள் பலவுண்டு முடங்கி விடாதே
கல்வியை துறை போகக் கற்றால் - நாமும்
கலங்காமல் நாளுமே வாழ்ந்திட முடியும்.

கலாசாரக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரினிலே வாழுகின்ற மானிடர்களே - இந்த
பிஞ்சு உள்ளம் சொல்வதைத்தான்
கேட்க வாங்களேன்.

உலகத்தையே அறியாத சின்னப்பிள்ளை நான்
பெண்ணென்று அறியாத குட்டிப் பிள்ளை நான்.

ஆணைக் கண்டால் எட்டித் தூர ஓடத் தோணுதே - ஐயோ
பயத்தில் எந்தன் உடம்பெல்லாம் பதறலாகுதே.

சிறுமியர்கள் நலனில் நாமும் அக்கறை கொள்வோம் - நாட்டில்
சிறுவர் துஷ்பிரயோகம் ஒழியக் குரல் கொடுப்போம்
அண்ணன், தந்தை உறவு என்றும் புனிதமானது - அதனை
தகாமுறையில் கொள்வதுதான் கொடூரமானது.

பெற்ற மகளை பெண்டாட்டியாய் நடத்தலாகுமோ - அவளை
பேசா மடந்தை என்று நாமும் எண்ணலாகுமோ.

சிறுமியர்கள் நலனில் நாமும் அக்கறை கொள்வோம் - நாட்டில்
சிறுவர் துஷ்பிரயோகம் ஒழியக் குரல் கொடுப்போம்.

கலாசாரக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடியினில் தவழும் என் பிள்ளாய்
இருள் சூழ்ந்த உலகிலே ஒளியிங்கு இல்லை
பிறந்த நாள் முதலிலே ஓய்விங்கு இல்லை.

பெண்ணாக நான் ஏன் பிறந்தேனோ
என் குறை கேட்பாய் நீ எந்தன் கண்ணே
சொல்லிட யாரும் இல்லையே கண்ணே

எத்தனை ஆசை நெஞ்சினிலே
அடக்கியே என்னைப் பூட்டி வைத்தார்
பெண்ணாகப் பிறந்ததால்
பேதைக்கு இந்நிலை
பெண் என்று சொன்னால்
பிணமென நினைப்பார்.

படித்திட நானும் ஆசைப்பட்டேன்
பாதகம் என்றே தடை விதித்தார்
சிறைக்குள்ளே என்னை அழுதிட வைத்தார்
தாண்டிட முடியாவிலங்கினைப் போட்டார்.

தூங்கிய காலம் இனிப் போதும்
சிறைகளை உடைத்து வரவேண்டும்
புதுமைப் பெண்ணென பெயரினை எடுத்து
இருந்திட வேணும் என் மகள் நீயும்.

பழமையான பழக்கமெல்லாம்
பார்த்து நீயும் அடங்காதே
உணர்வு கொண்ட உயிரம்மா நீயும்
துணிவுடன் வாழ உடன் வரவேணும்.

கலாசாரக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆமை

நான் ஆமை நான் ஆமை
நான் எப்பவும் வெளியில் வரமாட்டேன்
எனக்குச் சுதந்திரமாகப் போகவும் வழியில்லை
நான் நடக்கும் போதெல்லாம் பயந்து பயந்துதான் நடப்பேன்
எனக்குப் பக்கத்தில் யாரும் வந்தால் உள்ளே போய் புகுந்து
கொள்வேன்.

நான் ஆமை நான் ஆமை
நான் பிறக்கும் போதே
நீ இப்படித்தான் வாழ வேண்டும் என்று
என் உடலைப் பாதுகாக்க
ஓடையும் சேர்த்து வைத்து விட்டார்கள்
நான் என் வீட்டையும் சுமந்து கொண்டு திரிகிறேன்
இது எனக்குப் பெரும் சுமையாக இருக்கிறது
அதைக் கழற்றி விட்டு நடந்து பார்க்க விரும்புகிறேன்
ஆனால் அப்படிச் செய்யலாமா
ஏன் எனக்கு மட்டும் இந்த ஓடு என நினைக்கிறேன்
ஆமாம் அது இல்லாவிட்டால்...

நான் ஆமை
என் ஓடைக் கழற்றக் கூடாது
சுமையென்றாலும் பறவாயில்லை
சுமந்து தான் ஆகவேண்டும்
என் ஆசையெல்லாம் இருக்கட்டும்
நான் வாழ்ந்தால் போதும்
நான் ஆமை நான் ஆமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பிறக்கும் போதே
நீ இப்படித்தான் வாழ வேண்டும் என்று
என் உடலைப் பாதுகாக்க ஓடையும் சேர்த்து வைத்து விட்டார்கள்.
நான் என் வீட்டையும் சுமந்து கொண்டு திரிகிறேன்.

இது எனக்குப் பெரும் சுமையாக இருக்கிறது.
அதைக் கழற்றி விட்டு நடந்து பார்க்க விரும்புகிறேன்.
சீ.... சுமையாக இந்த ஓடு இல்லாவிட்டால்
நான் எவ்வளவு சுதந்திரமாகத் திரிந்திருப்பேன்.

விஜிகலா புவனேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி

நான் கிளி
நான் ஒரு பச்சைக்கிளி
நான் எவ்வளவு சுதந்திரமாகப்
பறந்து திரிகிறேன்.

நான்
வாழ்க்கையில் எவ்வளவு
இன்பம் அநுபவிக்கிறேன்

நான் எத்தனை
காட்சிகளைப் பார்க்கிறேன்
எனக்கு உணவு இல்லாவிட்டாலும்
எங்காவது தேடிப்போய் - நான்
விரும்பிய உணவுகளை உண்ணுகிறேன்

நான் கிளி
எனக்கு இரண்டு இறக்கைகள் உண்டு
சுதந்திரம் உண்டு நான் பறக்கிறேன்
பெற்றோர் என்னை வளர்த்துவிட்டனர் - இப்போ
எனக்கு தேவையானதை நானே தேடுகிறேன்

எனக்கு எத்தனை நண்பர்கள் உண்டு
அவர்களுடன் சேர்ந்து பறக்கும்
சந்தோஷத்திற்கு அளவே இல்லை
அவர்களுடன் மனம் விட்டுப் பேசுவேன்.

எனக்கு எதிரிகளும் இருக்கிறார்கள் - அதனால்
நான் பயப்படவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயந்து பயந்து - நான்
பறக்காமல் இருந்தால் .....

எதிரிகளிடம் இருந்து - நான்
தப்பவும் பழகிவிட்டேன்

நான் சுதந்திரமாகப் பறந்து - வாழ்க்கையை
எதிர் கொள்ள விரும்புகிறேன்

நாம் சுதந்திரமானவர்களாக - வாழ்க்கையை
எதிர் கொள்ள விரும்புகிறோம்.

விஜிகலா புவனேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இருப்பு

ஆம்,
அன்று நான் ஊமையாய்
எது சொன்னாலும்
கேட்பாரில்லை
பார்ப்பாரில்லை

உரிமைகள்
உதாசீனம் செய்யப்பட்டன

கற்பென்ற விலங்கால்
பெண் என்பதால்
இன்னும் பலவற்றால்
மாய வலைக்குள்
அகப்பட்டேன்

யன்னல் அதனூடு வரும் காற்று
அதனூடு தெரியும் வெளி
இவை மட்டும் சாட்சியாய் ...

வெளியில்
ஆண்கள் மட்டும் சுதந்திரமாய்
நான்கு மூலைக்குள் என்மனம்
அடிக்கடி கேட்டுக் கொண்டது

எனக்கும் அந்தச் சுதந்திரம்

புத்தகங்கள்
என் இருப்பை உறுதிப்படுத்தியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது...
பழைய அடக்கு முறை
சவக்குழியுள்

என் சுதந்திரம்
என் முடிவுகள்
என் ஆசைகள்
என் கையில்
இப்போதும்...
எப்போதும்...

உதயாராணி சதாசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் உனக்காக

நீ வாழவேண்டும் என
ஆசைப்படுகிறாய்
உன்னால் முடியாமல்
அல்லல் படுகிறாய்

தோழி!
உனக்குள் இருக்கும் தயக்கம்
அந்த ஏக்கம்
எப்போது
உன்னை விட்டகலும்

உன் வாழ்வு பற்றி
சிந்திக்கிறாயா ?
சிந்திக்கும் நிமிடங்கள்
பயனுள்ளதா ?
நீ யாருக்கு பாதகமாய்
இருக்கிறாய்!

உன்னைப் பற்றிய கேள்விகள்
என்னுள் ஓராயிரம்!

அன்று நாம் இருவரும்
சந்தித்த போது
உன்னிடம்
இருந்து கிடைத்த விடைகள்
உன்னை மட்டுமல்ல
என்னையும்,
நாம் அமர்ந்திருந்த
மணல் பரப்பையும்,
நிழல் சோலையையும்
உருக வைத்தது தோழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குள் நிழலாடும் நினைவுகளை
சுமைகளை
கற்பனை வழிவில் தொலைத்து விட்டு
வாழ்வில் ஒவ்வொரு நிமிடங்களையும்
தோழி
பயனுள்ளதாக ஆக்கிக்கொள்.

தோழி
யதார்த்தமாக சிந்தித்து
செயல்படு
உன் ஆசைகள்
இலட்சியங்கள்
எல்லாம் உனக்காக.

மல்லிகா செல்லத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகமற்ற மனிதர்களா

நான் அன்று துயிலெழுந்து
முகம் கழுவும் வேளையில்
'றோந்து' வந்த படையினர்
குண்டுகள் வெடித்தன

ஊர் திரண்டு ஓடுகையில்
நாம் எங்கு போவோம் ?
ஷெல் வந்து வீழ்ந்திடுமோ
வாழ்வழிந்து போய்விடுமோ
பயந்த படி ஓட்டம்

பாழடைந்த வீடொன்றுள்
நுழைந்தோம்
வெடிதாங்காக்
குழந்தைகள் அழும் சத்தம்
இதயத்தைப் பிடுங்கியது

பயமுடன்
வேதனை பொங்கியது

காக்கிச் சட்டை போட்டவரின்
கட்டளையில் நாம் வாழ

இதயமற்ற பறவைகளா ?
முகமற்ற மனிதர்களா ?

எமது வாழ்வு யாரிடம் உள்ளது ?

கில்டா றூபினி ஆனந்தராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில வருடங்களின் முன்

அன்று அதிகாலை நேரம்
மணியோ 9.15
இருவர் வந்தனர்
கட்டளை போட்டனர்
பருவமடைந்து
வீட்டினுள் இருந்த என்னை
வெளியே கலைத்தனர்
அப்போதுதான் மஞ்சளரைத்து
பூசி விட்டு
எனக்கு பத்திரம் சொல்லி
அடுப்படிக்கு சென்ற
என் அருமைத் தாயை
கொடூர குரலில்
கட்டளை இட்டான் விடுதலை வீரன்
"வெளியே நட"
இன்னொருவன்
"வீட்டை எரி"
விடுதலை வீரர் சென்றனர்
என் மனம் எரிந்தது
பத்து நிமிடம் தான்
வெடியோசை கேட்டது
ஊரெல்லாம் கூடித் தெருவோரம் ஓடியது
விநாயகரின் சந்நிதி முன்
சரிந்து கிடந்தாள் என் தாய்
வெடியோசை கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதி தோய்ந்த
என் தாயின் உடலையே
கண்டேன்
எரிகிறது
என் மனம் எரிகிறது.

திக்கற்று நிற்கிறேன்
தனிமையிலே
தேற்றுவார் யாரும் இல்லை
எங்கு செல்வேன்
யாரிடம் சொல்வேன்
ஏது செய்வேன்
எதுவுமே புரியவில்லை.

வீடும் இல்லை தெருவுமில்லை
விடுதலையும் எமக்கு இல்லை
எரிகிறது என் மனம்
இன்னும் எரிகிறது

விடுதலை வீரனின்
போர்க்குணம் கண்டு
எரிகிறது இன்னும்
என் மனம் எரிகிறது.

அருட்கவிதா தேவநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு

எங்கே பார்த்தாலும்
யுத்தங்கள் நடக்கின்ற வேளைகளிலும்
ஒரு நாள்
என் காதில் சமாதானம் சமாதானம்
என்றொலி கேட்டாலும்
எனக்குள் சந்தேகம்
திரும்பவும் திரும்பவும் அந்த ஒலி
சமாதானம் 'என்ற ஒலி'
சந்தோசம் சந்தோசம்...

இனியாவது
உயிர்கள் உடமைகள் உரிமைகள்
பறிபட மாட்டாது - சந்தோசம்
எங்கேயும் நாங்கள் போகலாம்
இரவுகளில் நடமாடலாம்

துப்பாக்கிச் சூடுகள் விமான குண்டுவீச்சுகள்
இனியும் விரட்டாது
சோதனைச் சாவடிகளும் இனியும் இருக்காது
நாங்கள் அகதிகள் இல்லை
அலைக்களிக்கப்படுவதும் இல்லை
நாங்கள் சுதந்திரப் பறவைகள்
பறவைகள் சத்தமிட்டுத் திரிந்தன
விழிகள் விழிக்கையில்
துப்பாக்கிச் சூடுகள் குண்டு வீச்சுக்கள்
கனவா, கனவு
குழந்தைகள் அழுகுரல்கள் மக்களின் ஓலங்கள்
நினைவா நினைவு

சிறிவள்ளி அம்மன் சிதம்பரப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிப் பயணம்

ஆண்டு ஏழு கடந்துவிட்டது
எங்கள் கண்முன்னே
அந்த சிவப்பு நிற
பஸ் வண்டியில்
ஏற்றப்பட்ட 158 பேரின்
இருள் படிந்த
சோக முகங்கள்
போனவரின்
முகத்தில் ஓடியது வாழ்வின்
இறுதிப் பயணம்
போய்வருகிறேன் என்ற வார்த்தையைச்
சொல்லக் கூட .....

அவர்களின் வாழ்வு
தாய், மனைவி, பிள்ளைகள், அண்ணன், தம்பி என்று வளர்ந்து
விரிந்த விருட்சமான வாழ்வு
இன்று யாருமில்லை
உறுதியான எதிர்பார்ப்பு மட்டும் கூடவே .......
கணவனைக் காண்பேன், அப்பாவைக்காட்டுவேன்
மகனைக் காண்பேன், அண்ணாவைக் காட்டுவேன்
கண்கள் விழித்திருக்கின்றன ...
கண்கள் விழித்திருக்கின்றன ...
கண்கள் விழித்திருக்கின்றன ...

ஜெயந்தி தளையசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குதல்

வெளியே சொல்லாமல்
தவிக்கும் வேளையில் தான்
எனக்குள் கேள்விகள் இருந்தன
மனதில் உள்ளதை
வெளியில் சொன்னால்
நிம்மதி கிடைக்கின்றது
வெளியே வரமுடியாமல்
தவிக்கும் போது
ஏற்படும் தவிப்பு
யாருக்குத் தெரியும்
தெரிந்தாலும் பயனில்லை
அடக்குபவர்கள் இருக்கும்வரை
அடக்கப்படுபவர்களும்
இருந்து கொண்டேதான் வருவார்கள்

ஜீவலதா சித்திரவேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கம் நீ

பெண்ணாய்ப் பிறந்தது பெருமை
நல்ல மனைவி, நல்லதாய்
அருமையான கணவன்
நல்ல வாழ்க்கை - அப்படி
இருக்கையில் என்ன
பிரச்சினை கண்டாய்

வீட்டிற்குள் இருந்தால்
தெரியாது பிரச்சினைகள்
அதையும் விட்டு - கொஞ்சம்
வெளியே பாரும் - அப்போது
தெரியும் உன் கேள்விக்கு விடை

பெண்ணாய்ப் பிறந்தது
பெருமைகள் பல சேர்த்திட
என்று எதற்காக சொல்கிறார்கள் ?

அவள் ஆற்றல்கள், திறமைகள்
முயற்சிகள், பலன்கள், சிந்திக்கும் தன்மைகளை அல்ல
கற்புக்கரசி, பத்தினி, அடக்கம், பணிவு
இவைகள் தான்
பெருமைகள் சேர்க்குமாம்
ஏன் இந்த நிலை?

பெண்ணே உன் சிந்தனைக்கு
விருந்துகள் படைக்க
பேனா எனும் கரம்
உன்னிடம் உள்ளது
அதன் உதவியை
நீ பயன்படுத்து - அது
உன் வாழ்வின் வசந்தத்திற்கு
ஒரு அத்திவாரமாக அமையும்.

ஜெயராணி நீலராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தாட்டம்

வெளி நாட்டுப் பணத்திற்காக
மருமகளின் வயிற்றினுள்
பிறந்த பிள்ளையை வளர்க்கிறாள் மாமி

தாய் பிள்ளையைக் கேட்கும் பொழுது
மறுக்கிறாள் மாமி

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த
குழந்தைகளை கூப்பிடுகிறாள் - தாய்
பந்தாட்டம் நடக்கிறது.

மூன்றுகுழந்தைகளுடன் தாயும்
ஒருகுழந்தையுடன் மாமியும்
பந்தாட்டம் நடக்கிறது.

நடுவராக வந்த மாமன்
மருமகளின் கழுத்தை
பிடித்து அடிக்கிறான்
மயங்கி விழுந்த
மருமகளின் வயிற்றில்
காலால் மிதிக்கிறான்

பந்தாட்டம் நடக்கிறது
பெற்ற தாய்க்கு பிள்ளை இல்லை
பந்தாட்டம் நடக்கிறது.

ஜீவா கனகசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது விளையாட்டல்ல

அன்று கண்டேன் ஒரு வேடிக்கை
இன்று அதை நினைத்து, நினைத்து
கற்பனையில் கலங்குகிறேன் - அது
பக்கம், பக்கமாய் ஓடுகின்றது !

பெண்ணே! வாழ்க்கையில் விளையாடி விட்ட
வேடிக்கையான விளையாட்டு
பெண்ணே! இனியும் வேண்டாம்
சிந்தித்து சுயமாக விளையாடு!

ஊரார் போற்றினும், தூற்றினும்
துணிவுடன் உன் சேவையை தொடரு
காலம் மாறியதும் - நீ
புதுமையாய் வாழ்வாய்!

உன் சேவையே மகத்தானது
சேவை என பாராட்டு கிடைக்கும் !

பரமேஸ்வரி மயில்வாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறகு

நான்
தோற்று விட்டேன்
என்று அன்று
நினைத்துக் கொண்டேன்
காதலே பிடிக்காதவள்
காதல் என்பது
சென்டிமென்ட் சரக்கென
ஓலமிட்ட நான்

தங்க இடமின்றி
தத்தளித்து யோசித்த
அதிகாலை 5.30
மணிக்கு
என்னை விற்க மனமின்றி
காதலை ஏற்றுக் கொண்டேன்.

ஓ......
என் தலையை
அடகு வைத்த
இன்று நான்
தோற்று விட்டேன்
அன்று வரை
முடிவில்லா பாலைவனமாய்
எனக்குள் நான்
வாழ்ந்து கொண்டும்
சிலுவைகளாக
சிலவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமந்து கொண்டும்,
துறவியாகி,
பட்டுடுத்துவது போல்.

எனக்குள் நகைத்து
எதையோ உடுத்திக்
கொண்டும் .....
இருப்பதற்கான வழி செய்த
அந்த அதிகாலை நேரத்தை
இன்றும் மறப்பது என்பது ....

இன்றுவரை ...
என்னை நிரூபிக்க முடியாமல்
ஒவ்வொரு கடிதத்திலும்
அடிப்பதற்கும், அழுவதற்கும்
ஆறுதல் படுத்துவதற்கும்
முற் பணமாக
என்னை விற்றுக் கொடுத்த
அந்த
அதிகாலை இருளையும்
அணைந்து விடும் விளக்கையும்
மறக்க முடியாதபடி .....

காதலை ஏற்று
எனக்குள் தோற்ற
அந்த அதிகாலை இருளை
இன்று வரை
மறந்து
பயணிக்க முடியாமல் ....

விஜயலட்சுமி சேகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயாக எனது எதிர்பார்ப்பு

எனது வெற்றிக்குப் பின்னால் நீ எப்படி ... எப்படி....?
எனக்குள் கேள்விகள் எழுகின்றன
பல கோணங்களில் எழுகின்றன.

என்னை ஒரு படைப்பாளியாக
இந்த சமுதாயம் எவ்வாறு ஏற்றுக் கொண்டது ?

என்னை எழுதத்தூண்டியது யார் ?
என்னை படைப்பாளியாக
உரு ப்படுத்தியது யார் ?

என்னைத் தட்டிக்கொடுத்தவள் நீ
நான் உறங்கயிலே விழித்திருந்து
நான் சோர்வுற்ற போது உற்சாகமூட்டியவள் நீ

நான் எழுதப் போனாவைத் தொட்ட நேரங்களை விட
நீ எனக்காக
நான் எனது கற்பனைகளுக்கு, உணர்வுகளுக்கு
எழுத்து வடிவம் கொடுக்க
தேனீர் போட்டு விழித்திருந்த நேரங்களே அதிகம்

குடும்பத்தின் முழுப் பொறுப்பும் நீதான்
இதனால் எனக்கு ஓய்வு கிடைத்தது
நான் தேடலில் ஈடுபட்டேன்

உனக்கோ சுமை அதிகம்
ஓய்வில்லாத வாழ்க்கையால்
உனது ஆளுமை
கணவன், பிள்ளைகள், குடும்பம்
என்ற குறுகிய வட்டத்துள்
சுருங்கிப் போனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது எனக்குப் புரிகிறது
உனக்குள் இயல்பாகவே இருந்த கலையாற்றல்
எனக்கு நீ அளித்த பக்கபலத்தின் பிரதிபலிப்பு
எனது படைப்புகளுக்கு
விமர்சனம் அளித்த உனக்கு
நான் அளித்த எதிர்வினைகள் தான் என்ன ?

என்னிடம் மட்டுமே சொல்லிய விமர்சனத்தை
வெளியில் சொல்ல முடியாமல் தடை போட்டது யார் ?
அது நானாகக் கூட இருக்கலாம்.

உனது ஆற்றலுக்கு களம் அமைத்துக் கொடுக்க
நானும் பக்கபலமாக இருந்திருக்கலாம்.

இருந்திருந்தால் ...
உன்னை எழுதத் தூண்டியிருந்தால் ...

இப்போது நீயும் எழுத்துத் துறையில்
சாதனைகள் படைத்திருப்பாய்

மாற்றங்களை நாமே நமக்காக நமக்குள்ளே
உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

நான் இப்போது சிந்திக்கின்றேன்
எனது வெற்றிக்கான முழுமையான பங்களிப்பு
சுயமானது அல்ல.

அருள்ஜோதி இராமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் என்னுள் ?

யார் பெண் ?
சதைப் பிண்டமான
ஒரு வெறும் உடலா ?
உணர்வுகள் இருக்கிறதா ?

ஏன் அவன்
அப்படி நினைத்தான்
கேவலம்

அன்புடன் நேசித்தேன்
விருப்பத்தோடு
சுற்றித் திரிந்தேன்

முருங்க மரத்தில்
ஏறும் வேதாளம் போல
ஆண் என்ற
குறியீட்டையே
என்னிடம் காட்டிவிட்டான்

அவனின் கடைசிக்
கடிதம்
வெறும் வெற்றுக்
கடதாசியாக
இன்னும் என்னுள் ?

யாமினி வடிவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறந்திடாதே

சொல்லாலே வாளெடுத்து வீசிடாதே
பார்வையிலே துகிலுரிந்து பார்த்திடாதே
உன் வீட்டை எண்ணிப்பார் அங்கும்
என்னைப் போல் ஒரு பெண்ணிருப்பாள்
மறந்திடாதே

உணர்விலாச் சடப் பொருளாய்
உலவிவிட்டு நீ நடத்தும் நாடகத்தால்
சுட்டெரிப்பு பலாத்காரம் காதலென்று
பெண் உலகை
சிதைக்கும் தொடர்வதைகள்
செய்ய வேண்டாம்

எப்போதும் உடன் நடக்க சம்மதித்தால்
அதுதான் புதுயுகத்தின் பெரும் பரிசு

ஜீவா கனகசுந்தரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதி

நான் வெளியில் வரவேண்டும்

மனதில் தோன்றும் ஆசைகளை
கற்பனை வடிவில் கழிக்கின்றேன்

ஏன் நிஜத்தில் எடுக்க முடியாதா
நெஞ்சில் துணிவை வளரவிட்டு
என் காலை புவியில் ஊன்றி வைத்து
என் விழிகளை வெளியில் படரவிட்டு
அழகிய உலகில் என்னாலும்
ஓர் அழகிய உலகை
உருவாக்க முடியும் என்ற உறுதி மனம்.

பெண்ணே இன்றே எழுந்திடு - வீட்டுள்
வாழ்ந்தது போதும் என்றுணர்ந்திடு
உன்னைக் கட்டி வைக்கும் விலங்காம்
அச்சம், மடம், நாணம்
இவற்றைக் களைந்திடு
வெளியே வா

நீ எடுக்கும் முடிவில் நில்
செல்ல வேண்டிய பாதையை கவனி
உன் கால்கள் செல்ல வேண்டிய
பாதையை முன்னெடு

இலங்கேஸ்வரி அருணாசலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியில்

வெளியுலகிற்கு வந்ததால் - எல்லா
விடயங்களையும் நிலைமைகளையும்
அறிந்தேன் !

கட்டுப்பாடுகள் இல்லை
சுதந்திரமாய் இருக்கின்றேன்
மற்றவரும் என்னைப் போல் - இருக்க
விரும்புகிறேன்!

உணர்வுகளுக்கு
மதிப்பளிக்க முயலுங்கள்!

"அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்"

எவ்வளவு அனுபவம்
இவர்களுக்கு!
இவர்களைப் போல் - நானும்
இருந்திருந்தால் ....

எனக்கும் !
இதே நிலைதான்

ஏன்
இயலவில்லை இவர்களுக்கு!
சிந்திப்பதற்கு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி?
கிணற்றுத் தவளையாய்
வெளியில் வர முடியாதவர்கள்
உலகில் நடப்பதை
எப்படி?
அனுபவிக்கப் போகிறார்கள்

என்று நாம் விழிப்படைகிறோமோ
அன்று தான்
எனக்கு உரிமையும் உண்டு

எப்போதும்
சமவுரிமை சமத்துவம் என்று
பாடுபடுகின்றோம்
ஏன் கிடைப்பதில்லை?

அமுதா இராசசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவின் ஈரம்

உள்ளிருந்து கேட்கும்
ஓர் குரல்.
உனக்காக ஒலிக்கும் - என்
ஜீவனின் இசைக்குரல்
கண்ணிமைக்கும் நேரம்
கடக்கும் நிழல்கள்
கையசைத்து விடைகொடுக்கும்
காதல் பயணங்கள்
எனக்காக என் உயிர்
உன்னோடு வாழ கலங்கி வாடும்
அந்தப் பொழுதுகள்
இன்றும் தொடரும்....
கையசைப்பும் விடைகொடுப்பும்,
கணவன் மனைவியின்
அன்புச் சங்கிலிகள்,
என்னருகே நிழலாடும்.
மீண்டும் மீண்டும் ....
உந்தன் ஞாபகம் எனக்குள் மட்டும்
புகைமண்டலமாய்
கண்ணைக் கரிக்கும் நிமிடங்கள்.
மௌனமாய் விரல்கள்
கண்களின் கண்ணீரை
சத்தமின்றி தட்டிவிட
உருகும் உயிர்
தொண்டைவரை முட்பந்தாய்
நெஞ்சு வலி
மூளையிலும் முட்சுவர்
தொடரும்.....

விஜயலட்சுமி சேகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வு நடுங்குகிறது . . .

முதற்பருவம் தாய் மடியில்
முற்றிய பின்
பாசத்தை பயிராக்கி
நேசத்தை நீராக்கி
உதிரத்தை மையாக்கி
படிப்பதற்கு வழி காட்டி
மண்ணில் வாழவைத்த
என் தந்தை . . .

பிள்ளை என்ற சொல்லுக்கு
மறு சொல் தெரியாத
என் தந்தை.

பாசம் வைத்த நாட்களையும்
பாதம் பட்ட பாதையையும்
பார்த்து
விரல்களும் விழிகளும்
ஓய்ந்து விட்டன

நீ பிரிந்து போனாய்
பூக்களாய் மலர்வேன் - என்ற
கற்பனையில் போய் விட்டாய்

இன்று
பூக்கள் வாடுவதைப் பார்க்க
மனம் வெந்து போகிறது.

சோர்ந்து போன இதயமும்
தேய்ந்து போன விரல்களும்
விழிகளும் மட்டுமே
என்னிடம்
இருப்பதை அறிவாயா ?
நீ இல்லை - வாழ்வு நடுங்குகிறது.

மல்லிகா செல்லத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துளிகள்

பிரச்சினைகள் இன்றி
சந்தோஷமாக
வீட்டினுள் இருக்கக் கூடாதா ?

இங்கே எல்லாவற்றையும் பெறும் போது

அதுவே சொர்க்கமல்லவா
உள்ளே இன்பகரமாக வாழும் போது
ஏன் வெளியில் வரவேண்டும் ?
மற்றவர்கள் வெளியில் திரிந்து
எதை பெறுகிறார்கள்
வீண் சரவைகளை விட்டு
பிரச்சினைகள் இல்லாத வாழ்க்கை
வாழக்கூடாதா ?

நான் சுயமாக சிந்திக்கின்றேன்
ஆனாலும் முடியவில்லை
என்னால் மற்றவர்கள் பயன்பெற நினைக்கையில்
ஏன் குமுறுகிறது இந்த சமூகம்
சிலவேளைகளில் ஒடுக்கப்படுவது போல்
இருக்கும் பொழுது
நான் விடுபட எத்தனிக்கிறேன்
சமுதாயத்தில் விடுபட்டு விலகிநிற்பது போல்
உணரும் போது
மீளவும் முயற்சிக்கிறேன்
என்னில் மாற்றம் ஏற்படும் போது
ஏன் வெறுக்கிறது இந்த சமூகம்
என்னுள் இருக்கும் விருப்புக்களை
வெளிப்படுத்த முனையும் போது
ஏன் தூக்கி வீசுகிறது இந்த சமூகம்
இவ்வாழ்க்கை போலியா ?
உண்மையா ?

பிரபாஜினி கோபாலசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம்

காற்றில்
மரங்கள் அசைகின்றன
மலைகள் அசைவதில்லை
ஆயினும் மலைகள் கதைக்கின்றன
மனங்கள் கதைப்பதில்லை
வானத்தில்
முகில்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன
முகிலுடன் சேர்ந்து மனங்களும் ஓடுகின்றன
ஆயினும் பதில் கிடைப்பதில்லை
வானத்தில்
நட்சத்திரங்கள் உண்மைக்காக சிரிக்கின்றன
மனிதர்கள் சிரிக்கின்றனர்
பொய்யாய் சிரிக்கின்றனர்
முகிலிலிருந்து வரும் மழையால்
பூமி மகிழ்கிறது
கண்களிலிருந்து வரும் மழையால்
பூமி அழுகிறது

எங்கள் பூமியில்
கண்ணீர் மழை
கொட்டோ கொட்டென்று
இரத்தமாய் கொட்டுகிறது.

சிறிவள்ளிஅம்மன் சிதம்பரப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் பரிசு

பத்து மாசம் சுமந்து - என்னை
பாரினிலே தவழவிட்டு
பாலூட்டி தினமும்
பாசமெல்லாம் வளர்த்து
பார்போற்றும் பெண்ணாய் - என்னை
வளர்த்திட்ட அம்மா
பார்ப்பதற்குத் துடிக்கின்றேன்
எங்கே நீ போனாாய் ?

பாட்டேதும் நான் படித்தால்
கேட்டிருந்து ரசிப்பாய்
இப்போதும் படிக்கின்றேன்
கேட்டு நீ ரசிப்பாயா ?

பிறப்பவர்கள் இறப்பது
நிச்சயம் தான் என்றாலும்
ஒரு நிமிடமும் - உனை
மறக்க முடியாதம்மா.

இன்றுந்தன் பிறந்தநாள்
ஞாபகம் இருக்கிறதா ;
பிறந்த நாளை நினைத்துவிட
இறந்த நாள் வருகுதம்மா

பிறந்தநாள் பரிசாக
உனக்கென்று எழுதுகிறேன்
உன் பிறந்தநாள் பரிசாக என்
சிறு பரிசை ஏற்றுக் கொள்
காற்றோடு விடுகின்றேன்
என் அன்பான முத்தத்தை.

விஜிகலா புவனேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடல்

சுயமாக சிந்திக்கின்றேன்
ஆசைகளையும் உணர்வுகளையும்
வெளிப்படுத்த ...
வெளிப்படுத்தவும் தயங்குகின்றேன்

எனக்கென்று ஒரு தேடலை
தேடுகின்றேன் ...
இன்னும் தேடுகின்றேன் ...

மாற்று வழியை யோசிக்கின்றேன்
செயல்படுத்த முடியவில்லை
எத்தனை பிரச்சனைகள்...

உண்மைகளை சொல்லியும்
கேட்பார் இருந்தும் உணர்வார்
யாருமில்லை
ஏன் ?

வாழ்வதானால் முழு மனிதராக
வாழ வேண்டும்
வாழ்தல் என்பது எல்லோருக்கும்
உண்டு
இதை உறுதிப்படுத்த ...

வாழவேண்டும்
ஆலமரத்தின் வேர்கள் போல் விழுதுகள் போல்
உறுதியாக ...

மல்லிகா செல்லத்துரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி

அழுகையுடன் - கடலில்
தத்தளிக்க - எம்
நாட்டில் அகதிகள்
கையில் குழந்தைகள்
சுமைகள்
முன்னேற முடியா
வேளையிலும்
இரைந்து இறங்கி வரும்
புக்கார விமானங்கள்
குண்டு வீச்சுக்கள்
ஆட்டலறி அடிகள்
ஊரின்றி உறவின்றி
இரவு பகல்
விழித்துக் கரை கடந்தோம்
வீதிகளில் எங்கள் வாழ்க்கை
என்றும் தொடருமா?

தாய் தந்தையின்றி
உறவுகள் எதுவும் இன்றி
ஆதரவும் எதுவுமின்றி
சஞ்சலிக்கும் வீதிகளில்
சத்தமின்றி நடக்கின்றேன்

அகதி முகாமில்
கஞ்சிக்கு ஏங்கி நிற்கும்
எம் வாழ்வு
எப்போ முடிவுக்கு வரும்
உணவு கிடைக்குமோ என்று
ஏங்கி நிற்கும் இனமே
அடிமை வாழ்வுக்கு ஆளாகி விட்டோம்
இதை யாரிடம் எடுத்துரைப்போம்.

சிறிவள்ளிஅம்மன் சிதம்பரப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் நானாக

என்னைப் பற்றி சிந்திக்கின்றேன்
பல கேள்விகள் என்னுள் எழுகின்றன.
மற்றவரின் உணர்வுகளை மதிக்கின்றேன்
பிரச்சனைகள், சிக்கல்களை எனக்குள் தீர்க்கின்றேன்

நான் முன்னெடுத்துச் செல்லும் போது - ஏன்
தடைகள் வருகின்றன
என்னை ஏன் பிழையாகப் பார்க்கின்றனர் ?
ஏன் தவறாக நினைக்கின்றனர் ?
விளக்கமில்லையா ?...
தெளிவில்லையா ?...

என்னுள் எனக்கு நம்பிக்கை
என்னால் முடியும் ?
யாருக்கும் பயமில்லை ? நான்
நேரான பாதையில் செல்கின்றேன் ?

இருந்தும்
நான் கூறும் கருத்துக்களை
ஏன் ஏற்பதில்லை
இந்த சமூகம் ?

பெண்ணைப் பற்றிச் சிந்திப்பதற்கு - பெண்ணுக்கு
உரிமை இல்லையா ?
அல்லது
சிந்திக்க கூடாதா ?

யார் என்ன பேசட்டும்
எனக்கு நானே நீதிபதி

அமுதா இராசசிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் வேண்டாம்

சோதனைச் சாவடியில்
காத்திருந்த நேரத்தில்
எனக்கு முன்னால்
வண்டி ஒன்று

ஒருவர் வந்தார் எட்டிப் பார்த்தார்
இன்னொருவர் வந்தார் எட்டிப் பார்த்தார்
எல்லோரும் வந்தார்கள் போனார்கள்
நானும் சென்றேன்
எட்டிப் பார்த்தேன்
“ சவம் ”

அழுக்குச் சேலை இரத்தம் தோய்ந்தபடி
ஒரு கணம் நிசப்தம், இதயம் இருண்டது
பார்த்தவர்கள் சவத்தை கடந்தபடி போனார்கள்
இதயம் இருண்டது
யுத்தம் வேண்டாம்
அவலம் வேண்டாம்
மனித குலத்தை சவமாக்கி
இழுக்கும்
யுத்தம் வேண்டாம்.

ஜெயந்தி தளையசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடமை எப்போ மலையேறுமடா ?

மஞ்சள் குங்குமம் அணிந்து
மல்லிகைப் பூச் சூடி
காத்திருந்த காலம் எல்லாம்
மலையேறிப் போச்சுதடா.

பெண்டாட்டியும் புருஷனும்
பாடுபட்டு உழைச்சாத்தான்
கால் வயிற்றுக் கஞ்சி தானும்
கவுரவமாய்க் குடிச்சிடலாம்
வீட்டை விட்டு வெளியேறி
வேலைக்குச் சென்று வரும்
பெண்டாட்டிக்கும் புருஷனுக்கும்
வீட்டுக்குள் வித்தியாசம்
வேதனையைத் தூண்டுதடா.

கதிரையில் ஆறுதலா
கண்மூடி அமர்ந்து கொண்டு
குசினியில் அவசரமாய்
தேனீர் போடும் மனுசிக்காகக் காத்திருக்கும்
மடமை எப்போ மலையேறிப் போகுமடா?

தில்லையம்மா ஜெகநாதபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைப்பதில்லை

அந்த நாட்கள்
அந்தச் சூழல்
அந்த வீதிகளில்
துவிச்சக்கர வண்டியில்
வலம் வரும் ஐயாவின்
கம்பீரத் தோற்றம்
இன்னும் என் கண்முன்னே

வைரவனின் விழாவில்
அழகான மேனிதனில்
அவர் அணிந்திடும்
விபூதி சந்தணமும்
கன்னி வாழை வெட்டுதற்காய்
ஆடும் சங்கார நடனமும் - இவன்
சைவ மகன் தானென்று
எடுத்தியம்பும் காட்சிகள்
மறக்க முடியுமா?

இவையெல்லாம் "மாயை"
மாயமாய் மறைந்திடும்
மனித வாழ்க்கையென
மனிதர் தம் வாழ்வில்
நினைப்பதில்லை.

ஜெயந்தி தளையசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரம்

நிம்மதியைத் தேடுகிறேன்
நிரந்தரமற்ற சகதிக்குள்
நிச்சயிக்கப்பட்டு விட்டது

நிழலாகத் தொடரும்
துன்பமும் வேதனையும்
தொலைவதாய் இல்லை

தூங்கிய விழிகளும்
தூரப்போன கனவுகளும்
சந்திக்காமல் போன
சந்தோஷங்களும்
மீட்டிப் பார்க்கிறது

வாழத் துடிக்கும் இதயங்கள்
வாழாவெட்டியாக
மாண்டு போவதையும்
எண்ணிப்பார்க்கிறது
நிம்மதியற்ற என் வாழ்வும்.

தேவநாயகம் அருட்கவிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுவேலி

எனக்குப் பயம்
தற்கொலையை
விரைவில் தேடிக்
கொள்வேனோ என்று.
எந்த வித
தாட்சணியமும்
அற்ற சூழல்..
உயிரைத்
தக்க வைத்துக்
கொள்வது
மிகவும் சிரமம்.
பசி ...
வயிறு அழும்
மனமோ !
கல்லாகி விட்டது
உணவைத்
தொடமுடியவில்லை
வாழ்தலுக்காகவே
உணவு.
சூழல்
இறப்பையே
நினைக்க வைக்கிறது
வாழ்தல் வேண்டாத
போது
உணவை மனம்
தள்ளுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதோ
இனி வரும்
இரவோ
மரணத்தை
தழுவ - நான்
தற்கொலை..
செய்யலாம்
தற்கொலை...
ஏமாற்றத்தை
என்னால் ஜீரணிக்க
முடியாமல் தான்.
ஏமாற்றத்திலும்
உன்னை நேசிக்கிறேன்
என்பதே உண்மை.

விஜயலட்சுமி சேகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்பதற்கில்லை

ஒருவேளை உணவிற்காய்ப்
போராடும் எங்கள் வாழ்வில்
புயலெனப் புகுந்த யுத்தம்
கண்களிற்குள் மண்ணைவீசித்
துடைத்தெறிய முடியாமல்
நிரந்தரமாய் ஒட்டிக் கொண்டு ...

இழப்பதற்கில்லை ஒன்றும்மினி ?

கூடி மகிழும் உறவிழந்து
உலவிடும் மண் இழந்து
உடமையும் தானிழந்து ...
இழப்பதற்கில்லை ஒன்றுமினி !!
உயிரினைப் பொத்தி வைக்க
அடைக்கலம் தேடும் வாழ்வு
தேவையே எமக்கு இன்னும் ?

ஜெயந்தி தளையசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்பரிசம்

அந்தச் சூரியன்
அடிவானத்தில்
மறையும் போது ....
ஆற்றங்கரையின்
தென்றல் - என்
மேனியில் விழும்போது ...
அயலவர்களின் ஒலி - என்
காதுகளைத்துளைக்கும் போது ...
வாகனத்தின் இரைச்சல்
என்னைத் திசைதிருப்பும் போது ...
என் நன்பி என்னை
இறுக்கமாகப் பிடிக்கும் போது ...
என் அமைதியை
வேதனைகள் குலைக்கும் போது ...
இதயம் - தளர்கிறது
உளம் - உணர்கிறது
நா - உச்சரிக்கிறது
கண் - நோக்குகிறது
மனம் - பதிவு செய்கிறது
காது - கேட்கிறது
இதுதான் அந்த அந்திப்பொழுது
அத்தனை அமைதியாய் சென்றது

தேவநாயகம் அருட்கவிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளுகை

நான் என்பதற்கு
ஆதாரமே இல்லாமல்
சிதைந்து கொண்டே
மிக... மிக...
சிதைந்து கொண்டே
இருக்கிறேன்

மீளவேண்டும்
மிக... மிக... விரைவாக
என்னால் மீள முடியவில்லை...
போடப்பட்ட கோடுகளுக்காய் - இது
நானே பின்னிய வலை
பாதுகாப்புத் தேடி - இது
நானே சிக்குண்ட வலை
என்னால் மீள முடியும்
வலை அறுந்தால்
அறுக்க முடியவில்லை - தனித்த
என்னால் அறுக்க முடியவில்லை
நூலின் பலம்
பலப் பல....
நூற்றாண்டுகளின் முன் - என்
கண்ணுக்குச் சிக்காத
மூதாதையர்களால்
தீர்மானிக்கப்பட்டு
பரம்பரை பரம்பரையாக
நம்பப்பட்டு வந்துள்ளது
என்
ஒவ்வொரு நிமிடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குப் பொன்னானது - இது
எனக்கு மட்டுமே புரியும்
என்னையும்
என் நேசங்களையும்
எனக்காக
சூழலையும், காரியங்களையும்
யாரோ தீர்மானிக்க ....

அழுத சிந்தனையுடனும்
தொலை தூர கற்பனைகளுடனும்
நான் ஆடிக் கொண்டுள்ளேன்
என்னைப்பற்றியும் - என்
தனித்துவம் பற்றியும் - என்
மீளுகை பற்றியும் ...
சதா ... சதா ...
யோசித்தலுடன் ....
தொடரும் சண்டைகளுடன்
குழப்பங்களுடன் - என்
மீளுகையின் வருகைக்காய்
தவமிருந்தபடியே...
இன்று வரை
மீளுகைக்காய் ....

விஜயலட்சுமி சேகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கவிதைத் தொகுதியில் வந்துள்ள இறுதிப்பயணம், யுத்தம் வேண்டாம் எனும் இரு கவிதைகளும் சூரியா நிலையத்தின் பெண் சஞ்சிகையில் வெளிவந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் சுதந்திரம், என் முடிவுகள்
என் ஆசைகள்
என் கையில்
இப்போதும் ....
எப்போதும்....



சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

St. Joseph's Catholic Press, Batticaloa.
crooschris@cp

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org